பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 11 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. உலகளாவிய பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வுகாணப்பட வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. செயற்கை நுண்ணறிவை பொறுப்புடனும், உரிய வகையிலும் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் வலியுறுத்தியுள்ளார்.
3. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற மகாராஷ்டிரா மாநிலத்தில் 65 சதவீத வாக்குகளும். ஜார்க்கண்ட் இரண்டாம் கட்ட தேர்தலில் 68 புள்ளி நான்கு ஐந்து சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளன.
4. சி பி எஸ் இ பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.
5. கேலோ இண்டியா இளையோர் விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு பீகாரில் நடைபெறும் என்று மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

<u>----- *இனி விரிவான செய்திகள்* ---</u>

[]<<<>>>[]

இந்தியா – கயானா இடையே சுகாதாரம், ஹைட்ரோ கார்பன், வேளாண்மை உள்ளிட்ட பத்து துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

ஜார்ஜ்டவுனில் நேற்று மாலை பிரதமர் திரு நரேந்திரமோடி, கயானா அதிபர் திரு முகமது இர்பான் அலி இடையே நடைபெற்ற பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களுக்குப் பின் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மருந்து பொருட்கள், மக்கள் மருந்தகம், கலாச்சார பரிமாற்றம், பிரஸார்பாரதி – கயானாவின் தேசிய தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, குஜராத் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் - கயானா தேசிய பாதுகாப்பு நிறுவனம் இடையேயான ஒத்துழைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டறிக்கை வெளியிட்டனர்.

உலகளாவிய பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வுகாண வேண்டுமென்று இந்தியாவும் - கயானாவும் ஒப்புக் கொண்டுள்ளதாக திரு நரேந்திரமோடி கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இரு நாடுகளும் வலியுறுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், கயானாவுக்கு கடந்த ஆண்டு இரண்டு டார்னியர் ரக விமானங்களை இந்தியா வழங்கியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கயானாவில் மக்கள் மருந்தகங்களை அமைப்பதற்கான பணிகளில் இந்தியா ஈடுபட உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கயானா அதிபர் திரு முகமது இர்பான் அலி, உலக நாடுகளின் வளர்ச்சிக்கு திரு நரேந்திரமோடி பெரும் பங்காற்றி வருவதாக அந்த கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு நரேந்திரமோடியின் கயானா பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கம் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலும்பெறும் என்று அவர் கூறியுள்ளார்.

பின்னர் தாயின் பெயரில் ஒரு மரக்கன்று திட்டத்தின் கீழ் ஜார்ஜ்டவுனில் திரு நரேந்திரமோடியும், திரு முகமது இர்பான் அலியும் மரக்கன்றை நட்டனர்.

கயானா நாடாளுமன்றத்தில் திரு நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

பின்னர் அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

ஜார்ஜ்டவுனில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் கயானாவின் உயரிய விருது திரு நரேந்திரமோடிக்கு வழங்கப்படவுள்ளது.

[]<<<>>>[]

லாவோஸ் தலைநகர் வியான்டினாவில் நடைபெற்று வரும் ஆசியான் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்திற்கு இடையே பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், மலேசியா மற்றும் லாவோஸ் நாடுகளின் அமைச்சர்களை சந்தித்து பேசினார்.

மலேசிய அமைச்சர் திரு டத்தோ ஸ்ரீ முகமது கலீத் பின் நோர்டின்-வுடனான சந்திப்பின்போது, இந்தியா – மலேசிய பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வதற்கு ஆதரவு தெரிவித்தார்.

லாவோஸ் அமைச்சர் ஜெனரல் சான்சமோனுடனான பேச்சுக்களின்போது, லாவோஸ் மற்றும் ஆசியானுடன் அனைத்து துறைகளிலும் நல்லுறவை இந்திய தொடர்ந்து வலுப்படுத்தும் என்று திரு ராஜ்நாத்சிங் உறுதியளித்தார்.

இன்று நடைபெறும் பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் திரு ராஜ்நாத்சிங் உரையாற்றுகிறார்.

**[]<<<>>>[]**

செயற்கை நுண்ணறிவை பொறுப்புடனும், உரிய வகையிலும் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு குறித்த கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

நிர்வாகம், வணிகம், சுகாதாரம், கல்வி மற்றும் விண்வெளி ஆய்வு உள்ளிட்ட துறைகளில் செயற்கை நுண்ணறிவின் முக்கிய பங்கு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கும் என்றும், பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கும் திறன் கொண்டதாக திகழும் என்றும் அவர் கூறினார்.

2047-ஆம் ஆண்டிற்குள் உலகில் செயற்கை நுண்ணறிவின் தலைமைத்துவமாக இந்தியா உருவெடுக்கும் என்று டாக்டர் ஜிதேந்திரசிங் நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பனிமூட்டம் காரணமாக விமானம் இயக்குவதற்கு மூன்று மணி நேரத்திற்கு மேல் தாமதமானால் அது குறித்து பயணிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்று சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு விமான நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பனிமூட்டத்தின்போது இடையூறு இல்லாமல் விமானங்களை இயக்குவது, பயணிகளின் வசதி தொடர்பான உயர்நிலைக் குழுக் கூட்டம் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது,

கூட்ட நெரிசல் நேரங்களில் அதிக அளவு பணியாளர்களை ஈடுபடுத்த வேண்டுமென்றும் திரு ராம்மோகன் நாயுடு கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சமூகத்தில் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கான அடித்தளமாக கல்வி திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் கஜ்ராவில் உள்ள ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளி மாணவர்களிடையே அவர் நேற்று கலந்துரையாடினார்.

கல்வி சமத்துவத்தை ஊக்குவிப்பதாகவும், ஏற்றத்தாழ்வை நீக்குவதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

நமக்கான பண்புகளை கல்வி வரையறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒழுக்கம், மதிப்புகள் மற்றும் மனித மேம்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்தல், சகோதரத்துவத்தை வளர்த்தல், ஒழுக்கத்தை கடைபிடித்தல் ஆகியவை வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்க வேண்டுமென்ற அவர் வலியுறுத்தினார்.

சமூக மாற்றத்திற்கான மிகப்பெரிய அம்சமாக கல்வி விளங்குகிறது என்றும் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 65 புள்ளி பூஜ்ஜியம் இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக கோலாப்பூர் மாவட்டத்தில் 76 புள்ளி இரண்டு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு நேற்று நடைபெற்ற இரண்டாவது கட்ட தேர்தலில் 68 புள்ளி நான்கு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதிகபட்சமாக ஜம்தாரா மாவட்டத்தில் 77 புள்ளி இரண்டு ஒன்பது சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மகாராஷ்டிராஷ்டிரா மாநிலத்தில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளும் நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.

பல்வேறு மாநிலங்களில் மக்களவை மற்றும் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தல்களில் பதிவான வாக்குகளும் அன்றைய தினம் எண்ணப்படுகின்றன.

[]<<<>>>[]

சி பி எஸ் இ பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி தொடங்கி மார்ச் 18-ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் பிப்ரவரி 15-ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் நான்காம் தேதி நிறைவடைவதாக சி பி எஸ் இ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறை சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு கருதி இம்பாலில் பள்ளிக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு நாளை மறுநாள் வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில உயர்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு, தௌபால், பிஷ்ணுபூர், காக்சிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் அனைத்து கல்வி நிறுவனங்களும் நாளை மறுநாள் வரை மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இதற்கிடையே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் ஏழு மாவட்டங்களில் நாளை மறுநாள் மாலை வரை இணையதள சேவைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஹரியானாவில் சிறப்பாக செயல்படும் அரசு ஊழியர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

மேம்பட்டப் பணிகள் மற்றும் முயற்சிகள் ஆகியவற்றின் வாயிலாக சிறந்த நிர்வாகத்திற்கு பங்களிப்பு செய்யும் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான விருதுகளும், மாவட்ட அளவிலான விருதுகளும் வழங்கப்படும் என்று ஹரியான மாநில தலைமைச் செயலாளர் திரு விவேக் ஜோஷி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

கேலோ இண்டியா இளையோர் விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு பீகாரில் நடைபெறும் மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பீகார் மாநிலம் ராஜ்கிரில் ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஸ் போட்டி வெற்றிகரமாக நடைபெற்றதை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அணியில் இடம்பெற்ற அனைவருக்கும் தலா பத்து லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்று பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கிரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 12-21, 21-19, 21-18 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு, புதுச்சேரி, அஸ்ஸாம், மேகாலயா, கேரளா ஆகிய மாநிலங்களில் ஒரு சில இடங்களில் நாளை இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைநகர் தில்லியில் அடுத்த மூன்று நாட்களுக்கு இரவு மற்றும் காலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்றும் அது கூறியுள்ளது.,

***<u>End of News</u>***